

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடமேற்கு
அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் புதியார் கிருஷ்ணபிள்ளை

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்)
அவர்களின் இறைபதம் அடைந்த

# நினைவு மலர்

12.08.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்களை கண்ணை இமை காப்பது போல
அன்புடனும் பண்புடனும் ஆதரவுடனும்
பேணி வளர்த்து எம்முடன் இருந்து
வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை
பகிர்ந்து எங்களுக்காக வாழ்ந்து
இடைநடுவில் எமைப் பிரிந்த
எமது அன்புத் தெய்வத்திற்காகவும்
அவருடைய ஆத்ம சாந்திக்காகவும்
இம்மலரை அவரது பாதார விந்தத்தில்
சமர்ப்பிக்கின்றோம்.
வணக்கம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் புதியார் கிருஷ்ணபிள்ளை

அன்னை மடியில் : 22.12.1932

ஆண்டவன் மடியில் : 13.07.2010

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி ஆனி மாதம்
அண்ணல் கிருஷ்ணபிள்ளை என்னும் அன்புடையான்
தண்ணளி சேர் பூர்வபக்க துதியைத் திதியில்
தான் மறைந்து சென்றடைந்தான் ஈசனவன் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் - பலாப்பழமும்
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்கசப்பாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டப் பெருச்சாளி ஏறிச்சடை கொண்டு வையத்துலாவி
அண்டத் தமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத்து உள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடையாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லா முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## விநாயகர் வணக்கம்

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந்தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற்குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழுகு ஒக்கின்றதே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டேயனுக்காகக் காய்ந்தனை அடியேற் இன்று
ஞாலம் நின் புகழேயாக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்.

## திருப்புகழ்

இருவினையின் மதி மயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சிற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி கனையையென்றெற் கருள்வாயே
தெரிமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனரு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறையறங் களோங்கு நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அன்னார் வழிபடு தெய்வங்கள் மீது வேண்டிப் பராவியது

### வன்னியப் பிள்ளையாரிடம் வேண்டுதல்

அம்மை அப்பனை வலம் வந்த உலகறிந்த மூத்தவா
உமைத் தினம் தினம் வணங்கி நின்றேன்
சோர்விழந்து தேம்பியழவிடாது தாங்கிப் பிடிக்கும் - வன்னியா
அன்புருக அழைக்கின்றேன் உன்பதியில் கணநாதா.

### மாறாம்புல மாணிக்கப் பிள்ளையாரிடம் வேண்டுதல்

அல்வாயுறை கணபதியே சரணமையா
ஏங்கி வரும் அடியவரை தாங்கும் விநாயகனே
கடைசிக் காலத்தில் தினமும் நின்வாசல் வந்த
கிருஷ்ணபிள்ளை எனும்நாமத்தை உடையாருக்கு நல்லருள் தாருமையா

### வல்லிபுர ஆழ்வார் துணை வேண்டித்துதி

கோவிந்தா கோபாலா மாயவா
என்நாளும் வேண்டி நின்றேன்
ஆழ்வார்கள் நாடெல்லாம்
தினம் ஆழ்பவனே - என்னையும் ஆளுமையா.

பாஞ்சாலி துயர் துடைத்த பரந்தாமா
கோவிந்தா கோவிந்தா -- எனக்குரல்
வந்த வேளையிலே மானம் காக்க
இந்தா இந்தா எனக் கொடுத்தாயே - துணியதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கந்தசஷ்டி கவசம்

**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டி கவசந்தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர, அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

**நூல்**

**நிலைமண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க வென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்!
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும், தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகெண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுன டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டுங் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல்காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல்காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டு முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராஷ தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு மட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதி னிலிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையசங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்த ரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயல தருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சு மிகளில்
வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமையெல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக்குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்.

மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல் பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெகொப்பாய்
என்னானை என்னரை யனின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீதென்ன உறக்கமோ வாய்திறவாய்
அழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போத்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யா தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
புத்திகழும் பொய்கை குடைத்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழா மாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன் அருளே
யென்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்ப
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நினதன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாக்கள்

## மனைவி பிரலாபம்

மங்களமாய் உங்களுடன் வாழ்ந்த என்னை
தாங்கா தென்மனம் தளரக் காலன் கலங்கவைத்தான்
கனக்கின்ற இதயத்தில் கண்ணீர் மல்க கலங்குகின்றேன்
மறைந்தீரே ஐயா! பிறவியறுக்க சிவலோகம்சிவிகை யூர்ந்து
மங்கலநாண் தனைக்கழற்றி மருமார்பில் அதுபோட்டு
அமங்கலி என்னும் பெயர் சூட்டி வாழுகின்றேன்
எந்தன் பரிதாப நிலை தன்னைப் பாரீரோ
மீண்டும் பிறப்பெடுத்து வந்தெனக்கு ஆறுதல் தாரீரோ.

## மகன்மார் பிரலாபம்

இன்முகம் காட்டி எங்களை இன்சொல்லால் அழைத்த வார்த்தை
சிந்து மொழிகள் பேசி சிரிக்க வைத்த வார்த்தையெல்லாம்
மனத்திரையில் அசைபோட்டு எங்கள் நெஞ்சைப் பிழியுதையா
உம் வார்த்தை எங்கள் என்பை உருக்குதையா
உந்தன் அன்பு மொழிகள் கேட்டு இன்பம் பெற்றிருந்தோம்.
என்றென்றும் எங்கள் வாழ்வில் துணையாக இருந்திடுஐயா.

## மகள்மார் பிரலாபம்

அருமையுடன் எங்களுக்கு ஐயா வாரி
அழகுடனே எமை வளர்த்தாய் ஐயா
உரிமையுடன் பாராட்டிப் பேணிக்காத்து
உளமிகுந்த கல்வியையும் தந்தாய் ஐயா
பெருமையெலாம் இன்று பாழாகிப் போச்சுதையா
பெரும்காற்றின் துரும்பாக ஆச்சுதையோ
தஞ்சமினி யாரையா எமக்கு இங்கு உண்டு
தரணியில் நான் தவிக்கின்றேன் ஐயோ! ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி பிரலாபம்

உடன்பிறந்திட்ட அன்பிலுயர்வுடை சோதரனே நீங்கள்
படும்பிணிச் சேதிகேட்டுப் பறந்து வந்திட்டனோடி
கொடும் யமன் கொல்ல மாண்ட கொடுநிலை கண்டேனேயோ
படுந்துயர் சொல்லப் போமோ பாவிநாம் கரைகின்றோமே
ஓடுகின்ற கண்ணீர்தானும் உன்னை வந்து சேருமோ
உன்படத்தை பார்ப்பதன்றி உடலைக் காணமுடியுமோ?

## மருமகன்மார் ஆ. பரமானந்தம், க. மகேந்திரதாஸ் பிரலாபம்

பாசமுடன் பெற்றெடுத்த தையலரை
பேணி அன்பாய் வளர்த்தீர்கள்
இன்பமுடன் நாளெல்லாம் இனித்திருக்க
வரனாக எமை ஏற்றுச் சுற்றத்தார்
வாழ்த்தி நிற்க மங்கலநாண் நாம் ஏற்றி
மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம்
தந்தையைப்போல் பரிவோடு எமைக்காத்து
வாழ்வதனில் ஏற்றமுறு
வழிகள் பல அமைந்திட்ட மாமாவே
குடும்பமெனும் கூடிழந்து நேசன் திருப்பாதம் சென்றதேனோ
கனக்கின்ற இதயத்துடன்
கலங்கி நாம் நிற்கின்றோம் - மாமாவே
இனி எப்பிறப்பில் காண்போம்
உங்கள் திருமுகத்தை.

## மருமக்கள் பிரலாபம்

கீர்த்தியால் உலகை விஞ்சும் மாமா
பாசத்தை நிறைவாய் காட்டி
பரிவுடன் எமை அழைக்கும் நேசம் நிறைந்த மாமா
எம் நெஞ்சத்தில் ஒலிக்குது மாமா
ஈசனார் தந்த அருள் இதுவரை தானென்றால்
வெந்து மனமுருகி என்ன செய்வோம் மாமா
மீள்ஜென்மம் எடுத்தேனும் எம்குடியில் உதியுமையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேரப்பிள்ளைகள் பிரலாபம்

அன்புருவம் காட்டி பாசக்கரம் நீட்டி அரவணைத்து
பண்புடனே பக்குவமாய் பலகதைகள் தான் கூறி
அறுசுவைப்பட்சணமும் ஆர்வமுடன் எமக்கூட்டி
எங்கள் மழலை மொழி கேட்டு இன்புற்றே இருந்தீரே
உங்களை அருகிருந்து பார்க்கமுடியாப் பாவியானோம்
இடரேதுமின்றி நீ அட்டதிசை போய் வருவாய்
கடந்ததுவோ மாதம் ஒன்று ஆனாலும்
காலமெல்லாம் உன்நினைவு எமைவிட்டு மாறாது.

### பூட்டப்பிள்ளைகள் பிரலாபம்

தத்தித் தத்தி நடந்துவர தாவியணைத்த தாத்தா
முத்து மழை நீ சொரிந்து நின்றீரே தாத்தா
எங்கோடிப் போனீரோ தாத்தா
பரிதவித்து அழுகின்றோம் தாத்தாவே!

### உற்றார் உறவினர் நண்பர்கள் பிரலாபம்

அல்லும் பகலும் உந்தன்
நல் ஆதரவு தேடிவந்து
சொல்லும் நல்கதைகள் கேட்டு
கலங்ககின்றொம் கவலையினால் நாமிங்கு !

### தேற்றம்

முன்னாளிற் புகழ் பெற்றே துலங்க நின்ற
முடிசூட்டி யரசாண்ட தருமதாதி
மன்னாதி மன்ன ரெல்லாம் மாண்டே போனார்
மாநிலத்தின் வாழ்வதுதான் கானல் நீரென்றே
உன்னுமத யாகமங்கள் உரைத்ததாலே
உயிரகல கிருஷ்ணபிள்ளை உத்தமர்க்காய்
மண்ணுலகில் அழுவதெல்லாம் வீணேயென்று
மனத்திருத்தித் துயர் தவிர்த்து வாழ்க நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கைகள்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும் "**
ஐயாவின் திருமுகம் எந்தன் மனதில் தினமும் வருகிறது
உந்தன் செய்கையும் செயலும் எம்மை வாட்டுதே
உந்தன் பிரிவை நினைக்க உள்ளம் குமுறுதே
எந்தன் விழிகள் உறங்க மறுக்கின்றது
எந்தன் கண்கள் சொரிகின்றதே
நாம் எவ்விடம் தேடிப் பார்ப்பது
உங்கள் முகவரி தெரியவில்லையே
ஐயா..... ஐயா........ ஐயா....

எந்தன் கண்கள் இறுதியில் உங்கள் திருமுகம் காணவில்லையே
எந்தன் கடமைகள் செய்யவில்லையே நான் செய்த பாவம்
அறியேன் ஐயா..... ஐயா.....
உங்கள் செல்வம் ஒளி இழந்து
உங்கள் நிழலைத் தேடி அலைகிறாள்
என் மழலைகள் கூட ஐயா... ஐயா... என்று
கதறி அழும் சத்தம் கேட்கவில்லையா
கண்கண்ட தெய்வம் ஐயாவே!
பாராட்டி, சீராட்டி, பசிநீக்கி, அறிவூட்டி குறையின்றி
வளர்த்த குலதெய்வமே ஐயா உங்கள் குரல்
மௌனமாய் போனதே
எங்களை மீண்டும் ஒரு தடவை வந்து பாரையா..
ஐயா...... ஐயா..... ஐயா.....!

**பாசமுள்ள**
**மகேந்திரதாஸ் – பொற்செல்வம்**
**குடும்பத்தினர் [சுவிஸ்]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியமான அம்மப்பாவிற்கு கண்ணீர்க் காணிக்கைகள்..

அம்மப்பா எங்கு சென்று விட்டீர்கள்
எங்கு சென்று விட்டீர்கள்.......
தொலைவினில் இருந்தாலும் நமது பாசம் எல்லையற்றது
எமக்கு அறிவு புகட்டி, ஊக்கம் தந்து, நீதி, நேர்மை, நியாயம்
என்பவற்றிற்கு எமக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றீர்கள்
எங்கு சென்று விட்டீர்கள்
எம் வாழ்க்கையில் தங்கள் அண்மையில் சில நாட்கள்
எம் மனதில் அந்நாட்கள் சொர்க்கத்தில் நடைபெற்ற
சொற்பனங்கள் எங்கிருந்தாலும் எமக்கு பல
பல புத்தகங்களை வாங்கித் தந்தீர்கள்
ஐயா.. ஐயா.. எங்கு சென்றீர்கள்
அருகில் இருக்கும் போது ஏன் தொலைவில் தேடுகின்றோம்
உலகில் எங்கும் தங்கள் பாசக் கதவு திறந்திருக்கின்றது.
என்று அறிந்தோம்
எம் பிரியமான ஐயாவே! எம் இதயத்தில் அமர்ந்து விட்டீர்கள்
என்றென்றும் உங்கள் நினைவால் வாடித்துடிக்கும்...

**– பேரப்பிள்ளைகள்**
**மதுரசனா, மதுகீசன், நிலோஜன்**
**(சுவிஸ்)**

---

## பாச உணர்வின் பேரலையில் சிக்கித் தவிக்கும் பேரன்கள்

பாசமுடன் நலமோடு நாம் வாழ பிறதேசம் அனுப்பி வைத்தீர்கள்
கதைக்கின்ற போதெல்லாம் எனக்கென்ன குறையென்ற உன் வார்த்தை
எந்தன் என்பை உருக்குதையா அம்மப்பா....
நெஞ்சம் கலங்கி ஐயா நெஞ்சுருகி நிற்கின்றோம் - அம்மப்பாவே
காலத்தின் கோலத்தால் உமை பிரித்து வாழ்ந்திடினும்
உங்கள் அன்பு மொழிகள் கேட்டு செவியின்பம் பெற்றிருந்தோம்
என்றென்றும் எம் வாழ்வில் துணையாக இருந்திடையா
கண்ணீரை காணிக்கை ஆக்குகின்றோம்.
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**– உங்கள் அன்பு பேரப்பிள்ளைகள்**
**க. ரகுபதி – கனடா**
**க. யசோதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கைகள்

## அமரர் திரு. பு. கிருஷ்ணபிள்ளை

(ஓய்வு பெற்ற வைத்தியசாலை, பிரதி மேற்பார்வையாளர்)

எத்தனையோ காயங்களை கடினமின்றி மாற்றி வைத்தீர்
வைத்தியத்தில் பேரோடும் புகழோடும் நின்றீரே
உங்கள் கலக்கமான செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றேன் நான்.

மன்னுயிர்கள் எல்லாம் மடிவது நிச்சயமே
ஆண்டவன் கட்டளைக்கு யார்தான் விதிவிலக்கு
பிறக்கும்போது இறக்கும் நாளை இறைவனே எழுதிவிட்டான்
இறந்தவர்கள் இறையடியில் இருப்பதற்கு இறைபதம் வணங்கிடுவோம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்**

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

என்றும் உங்கள் நினைவுகளுடன்..
**பேரன்**
S. S. S. இரத்தினஜோதி
மு/ செம்மலை மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணமற் போதல் – பொதுமையான சில அனுபவங்கள்

காணாமற் போதல் எனும் நிகழ்வு பல சந்தர்ப்பங்களில் ஏற்படலாம்.

சிலர் உள்ளூரிலேயே, வீட்டைவிட்டு வெளியே போன ஒரு சந்தர்ப்பத்திலே காணமற் போகலாம். இது பற்றிய சில ஊகங்கள் நிலவுமேயொழிய எவருக்கும் எதுவுமே தெரியாமல் போகலாம்.

ஆனால் வேறு சிலர், அவர்களது விருப்பத்திற்கு மாறாகப் பலவந்தமாகக் கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு பின்னர் காணமற் போகலாம். இவ்வகையான சந்தர்ப்பங்களில் சில அடிப்படையான சாட்சியங்கள் இருப்பினும் அவை பெரிதும் பயன்படாத ஒரு நிலை காணப்படலாம்.

சாதாரண குடியியல் நிலைமைகளிலே தொழிலுக்கென தொலைதூரம் செல்வோர் (உதாரணமாக கடற்றொழில்) வீட்டில் பிரச்சனைப்பட்டு வெளியெறியோர், அல்லது சமூக எதிர்ப்புடன் கூடிய காதலர்கள் திடீரென்று தங்கள் வீட்டிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தொலைந்து போய்விடுவர்.

அதேபோல வெளிநாடுகளுக்கு என்று புறப்பட்ட பலர் என்ன ஆனார்கள் என்று தெரியாமலே காணாமற் போயிருக்கிறார்கள்.

தனிப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளினாலும் சிலர் காணாமற் போய்விடுவதுண்டு.

மனநோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களில் சிலரும், அறளையின் தாக்கத்திற்குள்ளான ஒரு சில முதியவர்களும் சில வேளைகளில் காணாமற் போய்விடுவது பொதுவான அனுபவங்களுள் அடங்கக் கூடியவை.

சுனாமி, புவி நடுக்கம், வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களிலே மிகப் பெருமளவினோர் திடீரென்று காணமற் போய்விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த நிலைமைகளில் காணாமற் போதல் என்பது ஏறக்குறையப் பொதுவான மனதைக் கலவரப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பாரிய சண்டைகளிலும், ஊடுருவித் தாக்குதல் அல்லது தகவல் சேகரித்தல்களிலும், கடல் மற்றும் ஆகாயச் சண்டைகளின் பொழுதும் போரிடுபவர்களிற் சிலர் காணாமற் போய்விடுவார்கள்.

அதேபோல் போராளிக் குழுக்கள் தமக்குள்ளேயும், தமக்கிடையேயும் சண்டையிட்டுக் கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் பலர் தொலைந்து போய்விடுவதுண்டு. சில சமயங்களிலே போராளிக் குழுக்களுடன் இணைவதற்கெனப் புறப்பட்ட பலர் என்ன ஆனார்கள் என்று தெரியாததொரு நிலையும் ஏற்படலாம்.

உள்நாட்டு யுத்த நிலைமைகளில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போய்விடுகின்ற ஒரு சூழலில் காணாமற் போதல் எனும் செயற்பாடு திட்டமிட்ட வகையிலே ஒரு சமூகத்தினைப் பயப்படுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமுகமாக உலகெங்கணும் நடைமுறைப்படுத்தப்படுகிறது

ஒருவர் எவ்வாறான சந்தர்ப்பங்களிலே காணாமற் போயிருந்தாலும், அந்த நிகழ்வானது அவரைப் பிரிந்து இருக்கின்ற அன்புக்குரியவர்களிலே ஒரு குழப்பமான மனநிலையை ஏற்படுத்தும். இந்தக் குழப்பத்தின் அடிப்படையாக காணாமற் போனவர் இருக்கின்றாரா? இல்லையா? இருக்கின்றார் எனில் எங்கு இருக்கின்றார்? இல்லையெனில் எவ்வாறு இல்லாமற் போனார்? இல்லாமற் போனவரின் எச்ச சொச்சங்களாவது இருக்கின்றதா? போன்ற பல கேள்விகளும் குழப்பங்களும் ஏற்படுவது பொதுவான அனுபவங்களாகும்.

காணாமற் போனவரை உறவினர்கள் நாள்தோறும் தேடியலைவதும், அதற்குப் பொறுப்பானவர்கள் என்று கருதப்படுபவர்களும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் நிறுவனங்களும் அதிக அக்கறையின்றிக் கைகளை விரிப்பதுவும் பொதுவான நிகழ்வுகளாகும்.
ஒருவர் காணமற் போனதன் பின்னர், அவர் பற்றிய சிறிய தகவல்களுக்காகவும், செய்திகளுக்காகவும் ஏங்குவதும் வதந்திகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைக்கழிக்கப்படுதலும், முறைப்பாடுகள் விசாரணைகள் என்று அலைந்து திரிவதும் குடும்ப உறுப்பினர்களின் நாளாந்தக் கடமைகளிலே ஒன்றாகி விடுகின்றது.

காணாமற் போனதன் பின்னர். அவர் பற்றிய சிறிய தகவல்களுக்காகவும், செய்திகளுக்காகவும் ஏங்குவதும் வதந்திகளால் அலைக்கழிக்கப்படுதலும், முறைப்பாடுகள் விசாரணைகள் என்று அலைந்து திரிவதும் குடும்ப உறுப்பினர்களின் நாளாந்தக் கடமைகளிலே ஒன்றாகிவிடுகிறது.

காணமற் போன ஒருவர் இருப்பதாக நம்பிக்கொள்வதா? அல்லது இறந்து போனதாகக் கருதுவதா? என்பதே இந்த விடயத்தின் மிக அடிப்படையான ஒரு துன்பமாகும்.

உண்மையில் காணாமற் போன ஒருவர் இறந்துதான் போயிருந்தாலும், அதை ஏற்றுக் கொள்வதற்காக ஏதாயினும் தடயங்கள், அடையாளங்கள், அறிவித்தல்கள், ஒப்புக் கொள்ளல் போன்றவற்றிற்காக அங்கலாய்ப்பதுவும், ஏங்குவதும் மிக மிகப் பொதுவானதொரு மனநிலையாகும்.

இவற்றைவிட சிலவேளைகளில் சாடைமாடையாக ஏதாவது தகவல்கள் கிடைத்தாலும், அந்தத் தகவல்களில் அடிப்படையிலே அவர் இல்லை என்பதனை ஏற்றுக் கொள்வதனை விட இருக்கின்றார் என்பதனை நம்புவதையே மனம் விரும்பும்.

காணமற் போதல் ஒருவகையான இழப்பு. இந்த இழப்பிலே தீர்க்கமாக எதுவுமே தெரியாது. இருப்பிற்கும் இல்லாமைக்குமான ஒரு மனப்போராட்டம் தொடர்ந்த வண்ணம் இருக்கும். “இருந்தால்...” “இல்லையென்றால்....” போன்ற எதிர்காலம் பற்றிய பயவுணர்வு ஏற்படும். விரக்தி மேலோங்கும். வாழ்வு பிரயோசனமற்றது எனும் எண்ணம் தலைதூக்கும்.

இவை சாதாரணமானவையே, தற்காலிகமானவையே, விரக்தி மேலோங்குகையில் அது பற்றிய நெருக்குமானவர்களுடன் கதைத்து ஆறுவது பிரயோசனமானது.

அதுபோலவே வாழ்க்கையிலேயே பிரயோசனமாக ஆற்றக்கூடிய காரியங்கள் இன்னமும் இருக்கின்றன என்பதனையும் எண்ணத் தலைப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். காணாமற் போயிருக்கும் ஒருவரின் பெற்றோரைப் பராமரித்தல் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குதல், காணமற் போனவரைக் கண்டுபிடிக்கும் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுதல் போன்றன நல்ல சில வாழ்வு இலக்குகளாக ஆக முடியும்.

**கோபம் :**

காணமற் போதலுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளிலும், அதிகார மையங்கள் மீதும், நிறுவனங்களிலும், தனிநபர்களிலும் ஏன் தெய்வங்களிலும் கூடக் கோபம் ஏற்படுபவது இயற்கையானது.

இந்தக் கோபத்தைப் பொறுமையுடனும், பொருத்தமான வழிகளினூடாகவும் கையாளுதல் அவசியமானது. அனாவசியமான சண்டைகள், வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் தேவையானது.

மிகவும் கோபம் எற்பட்டால் அதனை எழுதித் தீர்க்கலாம். அல்லது நடுநிலையான, அந்தரங்கம் பேணக்கூடிய நண்பர் ஒருவரிடம் கொட்டித் தீர்க்கலாம். வேலைகள் செய்யலாம், காலாற நடக்கலாம், கோபம் தணிகின்ற ஒரு சூழலில் கோபத்தின் நியாயங்களை பொருத்தப்பாட்டைப் பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்கலாம்.

கோபத்தைப் பொருட்கள் மீதும், சிறுவர்கள் மீதும், செல்லப்பிராணிகள் மீதும் காட்டுவதனைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**குற்றவுணர்வு :**

பல சந்தர்ப்பங்களிலே குடும்ப உறுப்பினர்களுக்குக் குற்றவுணர்வு தோன்றலாம். காணமற் போதல் என்ற நிகழ்வு நடந்ததற்குத் தாமும் உடந்தையாக இருந்திருக்கிறோமோ என்பதனால் ஏற்படுகின்ற குற்றவுணர்வு மிகப் பொதுவானது. உதாரணமாக " நான்தானே அவரைக் கடைக்குப் போட்டு வரச்சொன்னனான்." போன்ற நினைப்புகள், குற்றவுணர்வைத் தூண்டலாம்.

காணாமற் போன ஒருவர் இறந்துவிட்டார் என்பதனை நம்புவதும் அதற்கான ஆவணங்களை ஏற்றுக்கொள்வதும் மிகுந்த மனவேதனையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவுணர்வையும் ஏற்படுத்தலாம். ஆயினும் இவ்வாறு செய்வதன்மூலம் "தற்சமயம் அவர் இன்னமும் உயிரோடிருந்தால் அவரைச் சாகடிப்பது போல் ஆகிவிடுமே" என்ற நினைப்பும் வரத்தான் செய்யும்.

இதுபோல, ஒருவர் காணாமற் போனதன்பின்பு அவரைத் தேடியலைந்ததும், முறைப்பாடுகளை மேற்கொண்டதும்தான் அவர் மீண்டு வருவதில் பிரச்சனைகளை ஏற்படுத்தியதோ? என்ற நினைவுகளின் அடிப்படையிலும் குற்றவுணர்வு தோன்றலாம்.

சில வேளைகளில் காணமற் போதலின் பின்பு, குடும்ப உறுப்பினர்கள் தங்கள் வழமையான நிலைமைகளுக்கொ, புதியதொரு வாழ்க்கைக்கோ செல்கின்ற பொழுதும் குற்றவுணர்வு ஏற்படலாம். "நான் இப்படிச் செய்வது சரியா? அது காணாமற் போனவருடன் நான் கொண்டிருந்த உறவைக் கொச்சைப்படுத்திவிடுமோ?" போன்ற எண்ணங்களின் அடிப்படையிலே குற்றவுணர்வு ஏற்படுவது சகஜமே.

சில வேளைகளில் காணமற் போதலின் பின்பு, குடும்ப உறுப்பினர்களின் தங்கள் வழமையான நிலைமைகளுக்கோ, புதியதொரு வாழ்க்கைக்கோ செல்கின்ற பொழுதும் குற்றவுணர்வு ஏற்படலாம். " நான் இப்படிச் செய்வது சரியா? அது காணாமற் போனவருடன் நான் கொண்டிருந்த உறவைக் கொச்சைப்படுத்திவிடுமோ" போன்ற எண்ணங்களின் அடிப்படையிலே குற்றவுணர்வு ஏற்படுவது சகஜமே.

யதார்த்தைப் புரிந்து கொள்வதும், குற்றவுணர்வு ஏற்படவேண்டிய காரணத்தினுடைய உண்மையான நிலையை ஆராய்வதும் பயனுடையதாகும். தனியாக இவ்வாறு சிந்திக்கமுடியாதுவிடின் இவ்வாறான மென்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய இன்னனொரு உறவோடு இவற்றைப் பற்றிக் கலந்து பகிர்வது நல்லது.

**பயம் பதற்றம் பதகளிப்பு :**

இவ்வாறான உணர்வுகளும் மிகப் பொதுவானவையே காணாமற் போனவருக்கு என்ன நடந்திருக்கும் எனும் ஏக்கமும், கெட்ட செய்திகள் எதுவும் வந்துவிடக்கூடாதே எனும் பயமும், அவருக்கு இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடந்திருக்கும்? இனி என்ன நடக்கும்? என்ற பதகளிப்பும், என்ன செய்வது? எப்படிச் செய்வது போன்ற எண்ணங்களுடன் தொடர்பான பதற்றமும் ஏற்படுவது இயல்பானதே.

பதற்றமாக உணர்தல், இனம் புரியாத பய உணர்வுக்குள் தத்தளித்தல், நித்திரைக் குழப்பத்திற்காளாதல், பயங்கரக் கனவுகள் காணுதல், நெஞ்சுப்படபடப்பு, மூச்சுவிடக்கஷ்டம், தலையிடி, உளைவு, குத்து போன்ற அறிகுறிகள் ஏற்படுவது சாதாரணமானதே.

இவற்றைப் பற்றி அறிந்திருப்பது அவசியமானது அத்துடன் போதுமானளவு ஓய்வு எடுத்தல், சுவாசச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துதல், எளிமையான தியான வழிகளைப் பின்பற்றுதல், யோகப் பயிற்சிகளில் ஈடுபடுதல் போன்ற தளர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், உடலும், மனமும் தளர்வாகி புத்துணர்வு பெற்று, செய்யவேண்டிய காரியங்களைத் திறம்படச் செய்யும் ஆற்றல் மேலோங்கும்.

இதுபோன்று நம்பிக்கையுடையவர்கள் அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே சடங்காசாரங்களை மேற்கொள்வதும் பயன்மிக்கது.

மேலே பார்க்கப்பட்ட சில உணர்வுகள் பெரும்பாலும் சாதாரணமானவையே. படிப்படியாக மறைந்து போகக்கூடியவையே. ஆயினும் சிலரிலே இவை நீண்டகாலங்களுக்கு நிலைத்து நிற்கலாம்.

பொதுவாக இவ்வாறான உணர்வுகளின் சாதாரணத் தன்மையைப் புரிந்துகொண்டு தேவையேற்படும் பொழுது கதைத்து ஆறுதல் பெறுதல் பிரயோசனமானது. ஆனால் இவ்வாறான உணர்வுகள் ஒருவருடைய வாழ்க்கையையும், செயற்பாடுகளையும், முன்னேற்றத்தையும், பாதிக்குமேயானால், தகுந்த உதவிகளை நாடுதல் தேவையானது.

**டாக்டர். மாசிலாமணி ஜெயராசா**
உளநல மருத்துவர்
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தலைவரும்
எமது வாழ்வின் வழிகாட்டி
வானுலகு எய்திய செய்தி கேட்டு
எம்மோடு துயர் பகிர்ந்தோர்க்கும்,
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோர்க்கும்
உற்றார் அயலவர், அன்பர்கள் , நண்பர்கள்
அனைவருக்கும் எனது நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

**அல்வாய் வடமேற்கு,**
**அல்வாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org